# வாழ்க்கைச் சிற்பம்

வெ. சாரநாதன், எம் ஏ.

3474

PRESENTED BY:
KASIVISWANATHAN ... CHETTIAR

நவயுகப் பிரசுராலயம் லிமிடெட், சென்னை

3474

தனவைசிய இளைஞர் தமிழ் சங்கம்
Y. M. C.
ASSOCIATION
PAGANERI.
பாகனேரி

# வாழ்க்கைச் சிற்பம்

# வாழ்க்கைச் சிற்பம்


பிரின்ஸிபல்

வெ. சாரநாதன், எம். ஏ.



நவயுகப்பிரசுராலயம்

ஜார்ஜ் டவுன், சென்னை

திருச்சி அ. இ. ரேடியோவில் ஒலிபரப்பப்பெற்று
அனுமதியுடன் வெளியிடப் படுகிறது



வெ. சாரநாதன், எம். ஏ.

# ஸமர்ப்பணம்

பல வருஷங்களாக
என் அறிவுக்குத் தாயுந் தந்தையுமாயுள்ள நண்பர்
ரெ. குப்புராமஸ்வாமி சாஸ்திரி அவர்களுக்கு
ஸமர்ப்பித்தது

# முன்னுரை

எனது நண்பர் ஸ்ரீ. வெ. சாரநாதன் இந்நூலுக்கு முன்னுரை யெழுதும் மகிழ்ச்சியை எனக்கு அளித்திருக்கிறார்.

இந்தக் கட்டுரைகளில் நான்கு பெரும் பொருள்கள் உணர்த்தப்படுகின்றன. அவையாவன: ஒவ்வொருவனது வாழ்க்கைக்கு முரிய தனிப்பெரு நோக்கம்; அவ்வாழ்க்கைக்கு இனிமை யூட்டும் செய்கைச் சிறப்பு; அதற்கு நிறைவும் அழகும் தருகின்ற குணத் தொகுதி, இதயப் பான்மை, அறிவுவளர்ச்சி; வாழ்க்கை யென்னும் கலைக்குரிய ஒருமைப்பாடு என்பனவே. வாழ்க்கைத் தத்துவங்கள் எனத்தகும் இப்பெரும் பொருள்கள் ஆழ்ந்து சிந்தித்து உணர்தற்குரியனவாம்.

இந்நூலிற் காணும் கருத்துக்கள் புதியன; நுட்பமாயுள்ளன; அழகு செறிந்தன. கருத்துக்களுக்குத் தக்கபடி யெல்லாம் தமிழ் நடையும் இடங்கொடுத்து வளர்ந்து செல்ல வேண்டுவது அவசியமாகும். எனவே இவ்வாசிரியரது தமிழ் நடையின் சிறப்பியல்பு ஊன்றி நோக்கற்பாலது.

தமிழ் மக்களது அறிவு வளர்ச்சிக்கும் நல் வாழ்விற்கும் இந்நூல் பெரிதும் உதவ வல்லதெனக் கருதுகிறேன்.

**எஸ். வையாபுரிப் பிள்ளை**

# பொருள் அடக்கம்


i. மூலக் கற்பனை ... 9

ii. நெசவு ... 20

iii. வர்ணம் ... 30

iv. சிற்ப ஒருமிப்பு ... 38

அநுபந்தம் ... 48

# வாழ்க்கைச் சிற்பம்

## i. மூலக் கற்பனை

ஒருவன் தன் வாழ்க்கையின் அம்சங்களெல்லாம் ஒற்றுமைப்பட்டு, இசைந்து, ஒருங்கு சேர்ந்து செல்வதை லக்ஷியமாய் வைத்துக் கொண்டு, தன் வாழ்நாளைச் செம்மையாய்க் கழிக்கவேண்டும். வாழ்க்கையை நடத்துவது ஒரு கலையில் தேர்ச்சி யடைவது போன்றது. நாம் படிப்பில் விருத்தியடைவதும், குணவிசேஷங்களைப் பெறுவதும், ஞானமார்க்கம் புகுவதும், கீதம், சிற்பம் முதலியவைகளிற் பயில்வது போன்றன. இவற்றில் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு வகை நுட்பமான அறிவாற்றலும் அப்பியாசமும் வேண்டும். நம்முடைய ஆத்மா மேன்மையும் அழகும் வாய்ந்த சரீர-வாழ்க்கை என்ற கோயிலைத் தனக்காகக் கட்டி அதில் வாழ வந்திருக்கிறது.

கோயிலுக்குச் சிற்பம் போல், வாழ்க்கைக்கு 'அளவின்கண் நிற்றல்' என்ற அப்பியாசம் இன்றியமையாதது. ஆங்கிலக் கவியாகிய மில்டன் இதையே புகழ்ந்து, 'உன் வாழ்நாளில் அதி

சீக்கிரமாகவே நீ அளவின்கண் நிற்பதற்குப் படிக்கவேண்டும்; நல்ல இயல்புள்ள சுகத்தை அடையக் கற்றுக்கொள்' என்னும் பொருள் படப் பாடியிருக்கிறார். இதை வாழ்க்கைச் சிற்பம் என்று கூறலாம். இவ்வகை வாழ்க்கைக் கட்டுமானத்தால் அல்லது சிற்பத்தினால் நம் மனம் பூரித்து, நமக்கு இன்பக் கிளர்ச்சிகள் உண்டாகி, பிறகு சாந்தப்பட்டு மனித சுகம் பெருகுகிறது; நம் வாழ்க்கையிலும், உள்ளத்திலும், உடலின்பம், உள்ளத்து இன்பம் என்ற இருவகை இன்பமும் இசைந்து ஓடுகின்றன; அப்பொழுது நம் மானிடப் பயிற்சியில் நம் வாழ்க்கைக்குச் சம்பூர்ண கற்பனைசக்தியின் விலாசம் கிடைத்துவிடுகிறது. இறுதியில் ஞானவாழ்வும் பரிணமிக்கிறது.

மானிடப் பயிற்சி என்பது நாம் நம்மையே கண்காணித்தல், அல்லது 'ஜாக்கிராவஸ்தை' யின் கூரிய முனையில் வசித்தல் என்ற பயிற்சி தான். இப்பயிற்சியால் மனித இயல்பை முற்றும் பயன்படுத்தல் கூடும். எந்தச் செயலிலும் நடுநிலைமையில் நிற்பது, தராதரம் பார்ப்பது, சுற்றும் நோக்குவது, அத்துடன் துடித்தெழும் உயிரைப் போல் நமது சாமான்யமான வழக்கங்களை ஊடுருவிச் செல்லும் மனம், நெஞ்சின் கிளரொளி, இளமை — இவைதான் மானிடத்தின் முன்னேற்றம்; மனித உயர்வுக்கு அடை

யாளம்; 'நயத்தக்க நாகரிகம்'. யுகயுகமாக மனிதவர்க்கம் யாதில் முன்வந்தது என்றால், குறைந்த அளவு உள்ள அனுபவத்திலிருந்து, நிறைந்த திருப்தி அளிக்கிற அனுபவத்தைக் கைப்பற்றுதலில்தான். அவ்விதமே மனித வாழ்க்கையின் பொருண்மை எண்ணமுடியாத அளவாகிவிடுகிறது; உள்ளத்தெளிவு உண்டாகிறது. இது பொது வாழ்க்கையின் இயல்பு. ஒவ்வொரு தேசத்தாரின் சரித்திரத்திலும் இதைக் காணலாம். தனி மனிதனின் வாழ்க்கையின் போக்கும் இவ்விதமே. இந்திரியங்களின் வலிமையும் நுட்பமான நுகர்ச்சியும் அதிகரித்து வருவதுடன் மன அடக்கமும் மனிதனுக்கு உண்டாகின்றது. இந்த இரு விதமான சக்திகளும் ஒன்றோடு ஒன்று லயித்து இனிய கீதம் பிறப்பிக்க வேண்டும். அதற்கு மூல கீதம், மூலத் துவனி, மூல ஸ்வரம், மூலக் கருத்து, மூலக் கற்பனை, ஓவியப் பொருள் என்று ஒன்று உண்டு. அதை ஒவ்வொரு வாழ்க்கைக் கலைஞனும் தனக்காகவே கண்டுபிடித்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு ஜாதியாரும் அப்படியே தங்கள் சாரித்திரத்தின் மூலக் கற்பனையைத் தெரிந்து தெளிகிறார்கள். ஆங்கிலேயரும், பிரஞ்சுக்காரரும், இவ்வழியில் தங்கள் சூக்ஷ்மமான தேசீய தந்திரத்தை நன்கு உணர்ந்திருக்கிறார்கள்.

சங்கீதத்தையும் ஓவியத்தையும் நோக்கினால் அடிப்பரப்பு வாய்ந்த ஒரு மூலக் கற்பனை ஒவ்வொரு கிருதியிலும், சித்திரத்திலும் மண்டிக் கிடக்கும் என்று சொல்லலாம். ஐரோப்பிய சங்கீதத்தில் ஒரு கீதம் முழுவதும் இசை ஊற்றுப் போன்ற ஓர் 'நோட்'டில் அடங்கி, உயிர்ச் சோதியுடன் இருக்கும். அந்தக் கீதத்தின் இசை ஸ்தானம் அந்த 'நோட்'தான் என்று சொல்லுகிறார்கள். அவ்விதமே ஒருவன் வாழ்க்கையிலும் ஒரு மூலக் கருத்து அல்லது கற்பனை ஓடிக்கொண்டிருக்கும். முக்கியமாக ஓவியத்திலிருந்து உதாரணத்தை எடுப்போம். ஒரு சித்திர அமைப்பானது அதன் அங்கங்களுக்குள்ள அழகிய ஒழுங்கு எவ்வளவோ அவ்வளவே சிறப்படைகிறது. அவ்விதமே வாழ்க்கையும் மேற்கூறிய அங்கங்களின் ஒருமிப்பிலும் அதற்குக் காரணமான ஓவிய மூலக் கருத்து அல்லது கற்பனையிலும் பொருளுடையதாகிறது.

வாழ்க்கையில் வெவ்வேறு காலங்களில் உண்டாகும் மூலக் கற்பனையானது அவ்வாழ்க்கையைப் புதுப்பிக்கிறது. 'சிறுவனுக்கு விளையாட்டில் ஆசை; இன்பம் தேடும் வாலிபனுக்கு இன்பந் தரும் பெண்ணிடத்தில் ஆசை; வயது முதிர்ந்தவனுக்குக் கவலைப்படுவதில் ஆசை; பரம் பொருளிடத்தில் ஆசை ஒருவனுக்குமில்லை'

என்று வடமொழிச் செய்யுள் ஒன்று கூறுகிறது. இன்னும் இதைவிடச் சிறிய மூலக் கற்பனை ஒவ்வொரு காலத்தில் நம் வாழ்க்கையில் புகுந்துவிடுகிறது. லோபியாயிருத்தலே மேன்மை என்று நடப்பது; வீரம் வேண்டுமே என்று ஓடியாடுவது, மனம் கரைவது; 'பெண்கள் கண்களுக்கு இனியனாவேனோ?' என்று பிரயாசைப்படுவது; 'தனிப் புகழ் நமக்குக் கிட்டுமா?' என்று கலைகளைப் பயில முயல்வது — இவ்வாறு ஓர் ஆதிநோக்கம் நம் முயற்சிகளுக்கெல்லாம் ஏற்படும். அது உலகத்தினரின் கண்ணுக்குத் தென்பட்டாலும், நாமே அதை நன்றாய் அறிவதில்லை. அது தசாநாதன் சூழ்ச்சியோ என்று நாம் நினைக்கக்கூடும். எப்படியானாலும், ஒவ்வொரு தசையில் ஒவ்வொருவித வாழ்க்கைச் சித்திரத்தை அமைத்துக் கொள்கிறோம்.

முயற்சி என்பது வினைகளைச் செய்தல். இது நாம் எக்காலமும் கையாளுவதாகும். உலகமே ஓடிக்கொண்டிருக்கிறது; இருப்பிலில்லை. மாறுதல்கள் ஏராளமாக உண்டாகின்றன. இந்நிலையில் மனிதன் தன் குணங்களைத் தானே அமைத்துக் கொள்ள வேண்டும். தன் இயல்பைப் பரிபாலித்துக் கொள்ள வேண்டும். ஏதோ ஒரு சான்றைப் பார்த்து நடந்துகொள்ள முடியாது. 'இமிடேஷன்' அவனுக்குப் பயன் அளிக்காது. தன் புக

மூடம்பு தன்னது என்று கருதவேண்டும். தன் லக்ஷியத்தைத் தீர்மானம் செய்துகொண்டு அதற் கேற்பத் தன் குணுதிசயங்களே அமைத்துக் கொள்ள வேண்டும், நல்வழியிலோ, கெட்ட வழியிலோ, தான் எவ்விதப் பயனைத் தேடுகிருன் என்பதைக் கவனிக்க வேண்டும். உறுப்பான மனிதத் தன்மை இவ்விதமே விளேகின்றது. பௌருஷப் பயிற்சி யற்றவன் மனித வர்க்கத் திற்குத் தாழ்ச்சியை உண்டாக்குகிருன்.

வினைகளேச் செய்வது நமது இயல்பு. அது நாம் கட்டாயமாய் ஏற்றுக்கொள்ள வேண்டிய பொறுப்பு. சாமான்யமான சரீர சுகங்களுக்காக வும், மனித சமூக உறவாட்டத்தில் கலந்து களித் தலுக்காகவும், குடும்ப நன்மைகளுக்காகவும் பாடுபட்டுக்கொண்டே யிருத்தல் அவசியமா யிருக்கிறது. மிருகங்களுக்கும் இவ்வித நலங் களுக்கு உரிமையுண்டு. தெய்விக குணங்கள் அமைந்த மனிதருக்கும் இவை தீராத கரும விலங்குக ளல்லவா? இவ்விதம் கருமங்களுக்கு அடிமைப்பட்டு இருக்கும் போதே, நாம் உள் ளத்தில், 'நாகரிகம் யாது? அது எப்படி நமக் குக் கைகூடும்? பொருள்களின் உண்மையை அறிந்து அவ்வறிவால் பிரதிபலிக்கும் அபிருசி களேப் பெறுவது எப்படி?' என்று எக்காலமும் யோசித்துப் பார்க்க வேண்டும். எக்கருமங்களே

யும் பிரியத்துடன் செய்யவேண்டும். ஆனால், நம் நிதான புத்தியை மட்டிலும் கைவிடுவது கூடாது. கருமமே கண்ணா யிருப்பதுடன் பொருள்கள் யாவற்றையும் நன்கு விலை மதிக்கும் இயல்பும் இருத்தல் வேண்டும். இதுவே பிரதானம். எப் படி மதப்பற்றுடன், 'அன்பே பிரதானம்' என்ற பூரண உணர்ச்சி வேண்டுமோ, அப்படியே முயற்சி யுடையார் என்று புகழ் பெறுவதுடன், திருவுடைய குணங்களைப் பூண்டவர் என்ற உயர்வையும் பெறவேண்டும்.

சீரான வாழ்க்கை - இன்பம் அடக்கமற்ற மிருகங்களுக்கு உரித்தல்ல. அவை மயக்கம், தூக்கம், மடி முதலியவை நிறைந்த ஓர் நிலையி லிருந்து திடீரென்று சீறுதல், வெகுளி, மூர்க் கம், ரௌத்திரம் என்ற நிலைக்குள் புகுந்துவிடு கின்றன. நடுநிலைமை என்பது மனிதனுக்கே சாத்யமானது. புத்தியைப் பயிற்சி செய்தல், தன் கருத்துக்களையும் ஆசைகளையும் பூர்த்தி செய்து கொள்ளுதல், உலகத்தில் எந்த ஸ்தானம் தனக் குரியது என்று நிர்ணயித்தல், உலகத்துப் பொ ருள் எவ்விதம் தனக்குச் சேவை புரியும் என்று அறிதல், இவை யாவும் மானிட சுகத்திற்கு அடிப் படையானவை. நம் புத்தி நெறி வழுவாது இருந் தால், நமக்கு வாழ்க்கைச் சுகம் பிறக்கும். இத் துடன், சுகம் நிலையற்றது என்றும், எப்போ

தாவது அதைப் பறிகொடுக்க வேண்டும் என்றும், நாம் தனியாய் ஊன்றுகோலின்றி நிற்கவேண்டியவர்கள் என்றும், பிரபஞ்சத்திற்கும் நமக்கும் ஓர் பிளவு ஏற்பட்டு நாம் கைதாழ்வோம் என்றும் ஆலோசிக்க வேண்டும். ‘ இங்கே அபாயம் ’ என்ற எச்சரிக்கை அடிக்கடி வாழ்க்கையின் நிலைகளில் போட்டிருப்பதைக் கவனிக்க வேண்டும். அவ்வாருயின் நாம் சுகிகளாகவும், விவேகிகளாகவும் ஒருங்கே அமைவோம். ஹிந்து மதத்திற்கு மூல புருஷர்களான வேதரிஷிகள், ‘எல்லாப் பொருள்களும் நமக்குச் சேவை புரியும்; நாமும் அவற்றுக்குச் சேவை புரியவேண்டும்’ என்ற விவேக சுகத்தைப் புகட்டினுர்களே யொழிய கேவலம் வைராக்கியத்தைப் புகட்டவில்லை.

வாழ்க்கையின் ஒழுங்கு அல்லது சிற்பம் மனிதன் தனது புத்தியின் வலிமையினுலேயே நிறுவிக்கொள்ள வேண்டிய தாகும். புத்தி இரு வகைப் போக்கு உள்ளது. பொருள்-உலகில் ஒரு பொருளுக்கும் மற்ருென்றிற்கும் உள்ள மாறுபாடுகளைப் பகுத்து ஆராய்ந்து பார்த்துத் திருப்தி அடைதல் புத்தியின் ஒரு வழி. அதனுடைய மற்ருெரு வழி என்னவென்ருல், இப்பொருள்களைச் சேர்த்துப் பார்த்து அவற்றின் அன்யோன்ய உறவாட்டத்தை அறிவாற்றலால் சுவீகரித்து ஒரு தத்துவ வழியை நிர்மாணிப்பது. பகுத்தறிவு

ஒன்று ; சமஷ்டி அறிவு அல்லது சிற்பஞான அறிவு மற்றொன்றாகும். கலை - அறிஞருக்குத் தம் புத்தியை இவ்விருவிதமாகவும் பிரயோகிக்க இயலும். பல்விதப் பொருள்களின் உருவ லாவண்யத்தை அப்படியே தனித்தனியாய்ச் சிற்பவேலையில் விளக்குவது சிற்பத் தொழிலின் வழிகளில் ஒன்று. இயற்கை உறுப்புத் தத்துவம் (Naturalism) என்று இது வழங்குகிறது. மனித வாழ்க்கையிலும் இந்தப் பயிற்சியைக் கையாளலாம். கலக்கமற்ற போக மார்க்கம் (Epicureanism) என்று இவ் வாழ்க்கை - மார்க்கத்தைக் கூறலாம். மற்றொரு வாழ்க்கை-மார்க்கமாவது சிற்ப ஞானியின் சமஷ்டி அறிவுக்கு ஒத்திருக்கும். ஆனால் இது மிகக் கடினமான வழி — உயரிய ஓவியம், உயரிய சங்கீதம் போல். ஒருவர் கூறியிருப்பது: 'இறுதியாகச் சொல்வேன்: நல்ல ஓவியம் என்பது புத்தி என்ற கருவியினாலேயே — அதிலும் எளிதல்ல — அனுபவிக்கக்கூடிய ஒரு சங்கீதம், ஓர் இராகம்.' அப்படியே உயரிய வாழ்க்கையும். நம் வாழ்க்கையிலிருந்தே பொருளுலகைச் சமஷ்டி அறிவினால் பார்க்க முயலவேண்டும். நம் புலன்கள் பொருள்களைப் பாகுபட்டதாகக் காட்டுகின்றன. ஒவ்வொரு பொருளையும் பார்ப்பதுடன் அப்பொருளைத் துளைத்து உண்மை ஞானத்தை உட்புகுத்திப் பொருளுலகுக்கு ஆதார

மான செம்பொருள் அல்லது அத்வைத உண்மையைக் கைப்பற்ற வேண்டும். தனிப் பொருள்கள் அச்செம்பொருளின் சின்னங்க ளல்லவா ?

இந்தச் சந்தர்ப்பத்தில், வாழ்க்கைச் சிறபத்திற்கு அவசியமான மூலக் கற்பனை அல்லது மூலக்கருத்து, அல்லது வாழ்க்கை என்னும் கீதத்திற்கு மூலமான 'நோட்', அல்லது வாழ்க்கை ஓவியத்திற்கு மூலமான நாடகப் பொருள் யாது? வாழ்க்கையை ஓவியத்திற்கு ஒப்பிட்டுப் பேசுவது ஒரு சிறிது எளிது. மூலக் கற்பனை, சித்திர வாய்ப்பு அல்லது நெசவு, வருணம், சிற்பம் அல்லது வரைதல் என்ற சொற்கள் மேற்கத்திய சங்கீதக் கலைச் சொற்களாக உபயோகப்படும் போது வேறு அர்த்தங்களைப் பெற்றுவிடுகின்றன. ஓவியக் கலைச் சொற்களாக வைத்துத் தான் இங்கே உபயோகித்திருக்கிறோம். மூலக் கற்பனை என்றால் ஒரு புஷ்டியான நாடக பாவம் அல்லது கருத்து என்பதுதான். வாழ்க்கைக்கு மூலக் கற்பனை ஆவது, போகம், யோகம், வைராக்கியம். இவற்றுள் ஒன்றானாலும் சரி; அல்லது இவற்றின் ஒரு பகுதியாகிய எந்த லக்ஷியமானாலும் சரி; இது வாழ்க்கைக்கு ஒற்றுமை என்ற அழகை அளிக்கிறது. மேலும் மனிதனின் வெவ்வேறு தசைக்கு வெவ்வேறு மூலக் கற்பனை இசைந்ததாகும்.

கடைசியாக, நம் வாழ்க்கையின் இசை அகில சிருஷ்டியின் அகாதமான இசையுடன் ஒத்து ஒலிப்பதுடன் அதில் லயிக்கவும் வேண்டும். மரணம் என்பது இவ்விரண்டு இசைகளும் லயித்து ஒன்றுபடும் காலம். மரணம் வரும் முன்னமே, நம் வாழ்க்கைக்கும் அகில உலக வாழ்க்கைக்கும் இசை ஒப்பந்தம் உண்டாக வேண்டும். நம் நாட்டுப் பூர்ணாவதார புருடனாகிய கிருஷ்ணபகவானும் அவரைவிடச் சற்றுச் சாமான்யமான அயல்நாட்டு ஜீவன் முக்தராகிய அசிச். பிரான்ஸிஸ் மகானும் இதற்கு உன்னதமான உதாரணங்களாவார்கள். அவர்களுடைய முழு வாழ்க்கையானது ஒரு பங்கமற்ற சிற்ப வேலையின் ஆழ்ந்த பிரகாசமான ஒற்றுமையழகையும், இசை-இன்பத்தையும் பெற்றிருந்தது. இந்தச் சிற்ப அழகையும், கீதப் பொலிவையும் நம் ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் ஒரு சிறிது சாதகம் செய்யலாம்.

## ii. நெசவு

உலக வாழ்க்கையில் தனி மனிதன் ஒருவன் சுற்றிலுமுள்ள மனிதக் கூட்டத்தின் வாழ்க்கைச் சக்திகளால் தாக்கப்பட்டு, ஒரு அச்சில் வார்த்த உருவமாகி, தன் சொந்த இயல்பைப் பாதுகாக்க இயலாதவனாகிறான். ஆனால் அழகுத் தெய்வத்தை வழிபடும் கலைஞன் உலகப் போக்குக்கு உட்படாமல், தன் உள்ளத்தின் அழகையும் வளர்ச்சியையும் எக்காலமும் காப்பாற்றி வருவான். சாதாரண மனிதனின் வாழ்க்கை உலகக்கட்டில் அகப்பட்டு அமைந்துவிடுகிறது. கலை-அழகு பெற்ற வாழ்க்கை தன் இயல்பின் வண்ணமே வளரும் ஆற்றலுள்ளது.

அது எவ்விதமெனில், முதன்முதலில், தன் தொழில்களின் ஒரு பகுதியும் தன் உள்ளத்தின் உயர்வும் தன் வசப்பட்டது என்று நன்கறிந்து, ஒவ்வொருவனும் தன் தினசரிச் செயல்களை வகுத்து வரையறை செய்தல் வேண்டும். இதில் அவனுடைய சாமான்யச் சிற்பம் விளங்கும். இது தான் ஒழுங்கு என்னும் நலம். ஒழுங்கிற்கு அடுத்த

படி, அழகு, சிறப்புச் சிற்பம் என்பது. சாமான்ய ஒழுங்கைத்தான் பெற்றோர்களும் பள்ளிக்கூடங்களும் சமூக ஏற்பாடுகளும் மனிதனுக்குப் போதிக்கின்றன. ஒரு சிறிது ஒழுங்கு எவ்வித மனிதருடைய வாழ்க்கையிலும் புகுந்தே தீரும். வக்கிரமான சுபாவத்திற்கும் உலக வாழ்க்கை ஒரு கட்டு ஏற்படுத்திவிடும். அதற்கு வழக்கம் என்ற பூண் போட்டாய்விடும். ஆனால், இவ் வழக்கமானது உயிரற்று, மனோபாவமற்றிருந்தால், அது மானிடத்திற்குப் பொருந்தியதல்ல.

ஒழுங்கு, உருவப்பாடு என்பது அநாதியானது. தத்துவ சாஸ்திரத்தால் நாம் அறிவது ஆதி முதற் பொருளாகிய நெளியும் சேற்றுப் பூமியில் ஒழுங்குச் சக்தி முளைத் தெழுந்தது என்பது. அதையே யூதர் வேதமும் வர்ணிக்கிறது: 'கடவுளின் ஆத்மாவானது எங்கும் வியாபித்த கடல் நீரின் முகத்தில் அமர்ந்து தியான சக்தியால் உருவங்களைப் படைத்தது' என்று. இதில் அடங்கியுள்ள உண்மை என்னவென்றால், உயிர்ப் பொருள்கள் **யாவற்றிலும்**, சிறிதிலிருந்து பெரியதும், எளிதிலிருந்து பல பகுதி வாய்ப்புள்ளதும், ஒழுங்கு என்ற சாமானியச் சிற்ப சக்தியால் பரிணமம் அடைகின்றன.

இப்படிப் பிரகிருதிச் சிற்பம் அழியாததாயிருக்கிறது. ஆனால், பொருள்கள் ஓங்கி வளர்ந்து

தத்ரூபமடையும் பொழுது அவற்றிற்குச் சிற்பக் கட்டுப்பாடு உண்டா? இல்லையா? வளர்ச்சியே பிரதானம் என்று வைத்துக் கொள்வோம். அதற்கு அடிப்படையாக, பிராகிருதமான சிற்பம் அல்லது ஒழுங்கு இருந்தே வருகிறது. பிறகு இதற்கு ஆதாரமாகவும் ஆபரணமாகவும் செயற்கைச் சிற்பம் அல்லது சிறப்புச் சிற்பம் என்பதை மானிடப் பயிற்சியில் முன்னேறும் நாம் படைத்தே ஆகவேண்டும்.

பொருள்களின் வளர்ச்சி, மனித வாழ்க்கை இவ்விரண்டிற்கும் செயல்கள் ஆதாரம். செயல்களின் சிற்பம் அல்லது இசை அல்லது அழகிய நெசவு என்பது மேற்கூறிய பிராகிருதமான ஒழுங்கிற்கு அதிகப்படியானது. இசைத் தத்துவம் அல்லது தாளச் சிறப்பு (Rhythm) என்ற ஒன்றில் அது தங்கியிருக்கிறது. இந்த 'ரிதும்' (Rhythm) என்பது, நாம் பார்த்திருக்கும் கோஷே (Cochet) என்ற டென்னிஸ் நிபுணரின் விளையாட்டிலும் சரி, வால்மீகி வருணித்த சீதையின் மனத்தைக் கவரும் 'ஸௌஷ்டவோபேத'மான அனுமானின் பேச்சிலும் சரி, கண்ணனின் தேரோட்டலிலும் சரி, ஒரே அளவில் விளைவையும் விருத்தியையும் பக்குவத்தையும் பெறுகிறது.

குழந்தைக ளிடத்திலும், பிராகிருத நாகரிக

முள்ள ஜாதியாரிடத்திலும் இந்தச் செயல்களின் இசை அல்லது 'ரிதும்' என்பதைக் காண்கிறோம். அது அவர்கள் உடலிலேயே ஓடும் சக்தியோ என்று நாம் மகிழ்ச்சியுடன் உற்று நோக்குகிறோம். ஆனால் நாம் முதலில் கூறிய அமைதி ஒழுங்கிற்கும் குழந்தைகளுடைய சேஷ்டைகள் அல்லது காட்டு மனிதரின் செய்கைகளுக்கும் எவ்வளவோ முரண்பாடு இருக்கிறதே? காரணம் என்ன? மனித அடக்கு முறை, மனிதக் கட்டுப்பாடு, ஒருவித சாமானிய ஒழுங்கிற்கு மூல காரணமாகும். இது நமக்கு வேண்டும், — வீடு, வாசல், பிழைக்கும் வழி முதலியன போல். ஆனால் நம் செயல்களின் இயற்கையான இசை, நாதம், கூத்து, கொண்டாட்டம், தாண்டவம் இவை முற்றிலும் ஒழிந்தால், வாழ்க்கையானது வெறும் விறகுக் கட்டாகும். அதைக் கொளுத்து!

ஆகையால் செயல்களின் இசை அல்லது 'ரிதும்' என்பதற்கு அழகிய பாதைகளையும், நர்த்தனம் ஆடத் தெருக்களையும், நாதம் செய்ய ஒலிக் கருவிகளையும் நம் வாழ்க்கையில் நாமே படைக்க வேண்டும். நம் தொழிற் பயிற்சியிலும், நம் கலைப் பயிற்சியிலும், நண்பருடன் கூடி உறவாடலிலும், தனியாகப் பொழுதைக் கழித்தலிலும், நம் அந்தரங்க விநோதங்களிலும், இசை

அல்லது 'ரிதும்' என்ற தெய்வ மாதைக் காத லித்துத் தேடிய வண்ணமே இருந்து, அக் காத லினுல் நம் வழக்கங்களாகிற ஓவிய உறுப்புக்களே அமைத்துக்கொள்ள வேண்டும். பாண்டவ வீரர் களில், வீமன், மனிதர்க்கு அதிர்ச்சி உண்டாக்கும் வீரச் செயல்களுக்கிடையே — அவன் சமைய லிலும், பாஞ்சாலியிடம் வைத்த காதலிலும் போல — இசைப் பொருத்தம் அல்லது 'ரிதும்' என்ற சித்தியைப் பெற்றவனுனன். எல்லாக் கலே களேயும் தந்திரங்களேயும் தன் வசமாக்கிய அர்ச் சுனன் செயல்களின் இசை என்பதை நறுமண மாலேயாகப் பூண்டவனல்லவா? அவன் தம்பி சகா தேவனே, சிந்தனேயும் செயலும் ஒருங்கே இசை அடக்கம் பெறும் வண்ணம் தன் ஆத்மாவைக் காக்கும் நிபுணனு யிருந்தானல்லவா? வாழ்க்கைச் சித்திரத்தில், மூலக் கற்பனேயும், வாழ்க்கை நெச வும் மேற்கூறிய செயல்களின் இசையினுலே கட் டுண்டு, இன்பப் பொருளாய் உருவப்பாடு அடை தலுக்குச் சான்றுகள் காவியங்களிலும், கலே ஞானிகளின் அப்பியாசத்திலும் ஏராளமாய்க் கிடைக்கும். தனி மனிதன் வாழ்க்கையின் சித்திர வாய்ப்பு அல்லது நெசவானது, செயல்களின் இசை அல்லது 'ரிதும்' என்பதிலிருந்து விளேகின் றது. அதன் பிறகு வாழ்க்கையில் வர்ணம் (Colour) என்ற இதயப் பொருள் பயன்படுகிறது.

தனி மனிதனுடைய வாழ்க்கையின் நெசவு (Pattern) சுற்றியுள்ள நாட்டு வாழ்க்கையின் சம்பந்தம் பெற்றதாகவே அமையும். கலைஞானிகள் பயிலும் கலைக்கும் நாட்டு வாழ்க்கைக்கும் ஒருவித ஒப்பு அல்லது பிடிப்பு பிரதானமல்லவா? அப்படியே, தனி மனிதனது வாழ்க்கையின் சித்திரம் நாட்டு வாழ்க்கை என்ற சுவர் இல்லாமல் எழுதமுடியாது. ஆகையால், நாட்டுத் தருமத்தை முற்றிலும் மீறித் தனிப் பாலைவனப் பாதையிற் புகும் மனிதன் தீரனுயிருத்தல் கூடும்; ஆனுல் வாழ்க்கைச் சிற்பத்தில் தலை சிறந்தவன் ஆகான். அவ்வாறே நாட்டுத் தருமம், கால நடவடிக்கை என்பவைகட்கு மனத்தைப் பறிகொடுத்தவனும் வாழ்க்கைச் சிற்பத்தில் ஒப்பேருதவனே!

மனிதரின் தற்காலிகப் பழக்கத்தை ஒருவாறு அங்கீகரித்தலே, 'வாழ்க்கைப் படத்திற்குச் சட்டம் வேண்டும்' என்று அங்கீகரிப்பதாகும். சட்டம், சித்திரத்திற்கு அளவு என்ற பிரதானமான அம்சத்தை அளிக்கிறது. அப்படியே நாட்டு வாழ்க்கையும் தனி மனிதன் வாழ்க்கைக்கு அளவு, ஒழுங்கு என்பவற்றை ஒரு சிறிது அளிக்கிறது. மேலும், தனி மனிதனது வாழ்க்கை-ஓவியத்திலுள்ள கோடுகளும், கோடுகளால் அமைந்த உருவங்களும், இவற்றிற்குக் கண்ணுன 'ரிதும்' என்ற சக்தியும், பிரபஞ்ச மாயையிலிருந்து —

கடலைக் கடைந்தெடுத்தாற்போல் — எடுக்கப்பட்டவை யல்லவா?

இவ்விதமே, தனி மனிதன் வாழ்க்கையில் தேச சமூகத்தின் சாயல் அடிக்கிறது. சமூகமும், சித்திரக் கோலைத் தனி மனிதன் கையிலிருந்து பிடுங்கி, அவன் வாழ்க்கையை ஒரு பக்கம் வரைகிறது. இது தொன்று தொட்டு வரும் போட்டி — தனிப்பட்ட ஜீவிதத்திற்கும், சமூக ஜீவிதத்திற்கும். சமூக தேவதை தனிப்பட்ட மனிதனை அடக்கியாள எப்பொழுதும் முன் வருகிறது. அரசியலில் மட்டிலுமல்ல, ஞான ரதம் ஏறிச்செல்லும் நிலையிலும்கூட அப்படிப்பட்ட ஒரு தடை நமக்கு உண்டு. ஆனால் சமூகத்தையும் முற்றிலும் பழிக்க முடியாது. 'பெற்ற மனம் பித்து; பிள்ளை மனம் கல்லு.' என்றாலும் பிள்ளைதான் ஜயித்துவிடுகிறான் என்பதற்குச் சான்று இருக்கிறது — சிலவற்றில். இறுதியில் நம்மைப் பெற்றவள் நம்மை விழுங்கிவிடுகிறாள் என்பது உண்மை. நாம் இவ்விதம் கட்டுண்டிருக்கையில் நம் வாழ்க்கைச் சிற்பம் எவ்வாறு உருப் பெறும்?

சமூக தேவதை ஏராளமான அன்புடன் — ஆனால் தளராத நோக்கத்துடன் — வரைந்த சித்திரக் கோடுகளும் உருவங்களும் ஒரு பகுதியில் அடங்கிய ஓவியமே, தனி மனிதனின் வாழ்க்கை-ஓவியம். நமது தொழிற் பழக்கம்,

நமது பகிரங்கத் தோற்றம், நமது மதம், நமது ஆசாரங்கள், நமது நாணயத் தன்மை, கடமை யியற்றல் முதலிய செயல்கள் குணங்கள் யாவுமே, சமூக தேவதையானது நாம் மறுக்க முடியாவண்ணம் நமக்கு அளிப்பவை. மேலும் சமூக நூல்களாலும், முன்னோரும் நம் காலத்தவரும் இயற்றிய இலக்கியங்களாலும், நம் அந்தரங்க ஆசைகளும் செயல்களும் மிகவும் மாறுபடுகின்றன. வாழ்க்கை இலக்கியத்தைப் பிரதிபலிக்கிறது என்று ஒரு பேரறிஞர் சுவையுடன் எடுத்துக் காட்டியிருக்கிறார். மனிதன் நடை உடை பாவனைகளுக்கும், தானே அமைத்துக்கொள்ளும் குணவிசேஷங்களுக்கும் உலகத்தின் சிறபக் கருத்துக்களும், இலக்கிய வாசனையும் மூலகாரணமாயிருத்தலைக் காண்கிறோம். புது விதமான குற்றச் செயல்களும்கூட இலக்கியப் படிப்பிலிருந்து உற்பத்தியாவதுண்டு. ஆகையால், நம் சமூகமும் பிரபஞ்சமும் நம்முடைய வாழ்க்கைச் சிற்பத்தை ஆரம்பத்தில் தாமே அமைக்கின்றன என்று கூறலாம். ஆனால் நம் சொந்த இயல்பானது, ஒரு பெண்ணைப் போல் படிப்படியாகத் தன் வீட்டிற்குத் தானே உடையவள் ஆகி,

'தெய்வம் யாவும் உணர்ந்திடும் தெய்வம்
தீமைகாட்டி விலக்கிடுந் தெய்வம்'

ஆக விளங்குகிறது.

தனி மனிதனது சொந்த இயல்பை வரைபவர் இருவரே ஆவர். உலக மாயையை ஆக்குவோனாகிய ஈஸ்வரனும், அவனால் ஆட்டிவைக்கப்பட்ட பூதமாயும் ஜீவனாயுமுள்ள அம் மனிதனுமே. மனிதன், தன் மட்டுக்குத் தன் இயல்புச் சித்திரத்தின் வரிகளையும் உருவங்களையும் 'அழகென்னும் தெய்வந்தான் அதுவென்றே யறிந்தேன்' என்ற சாக்ஷாத்காரத்தினால் அறிந்து தனக்கே நன்கு புலப்படுத்திக் கொள்கிறான். தன் செயல்களைப் பகுத்து அவற்றில் ஒவ்வொன்றிலும் நுகர்ச்சி இன்பம் யாது என்று பரிசீலனை செய்கிறான். பிறகு சுயாதீன அந்தரங்க வாழ்க்கையை நிர்மாணித்துக் கொள்கிறான். அதன் ஒழுங்கு அவனுடைய வெவ்வேறு தசைகளில் மாறுபட்டே இருக்கும். வாழ்க்கை நெசவு (Pattern) அப்போதைக் கப்போது புதியதாகும். ஆனால் செயல்களின் இசை அல்லது 'ரிதும்' குன்றாதிருக்கும்வண்ணம் தன் இயல்பின் உயிர்-ஊற்றுக்களை ரக்ஷித்து வருகிறான். தன் ஆத்ம சக்தியை, பக்தி நெறியினாலும் புத்தி நெறியினாலும் வளர்த்து வருகிறான்.

**'ஏகம் முதற்கல்வி முளைத்தெழுந் தெண்ணில் கேள்வி**
**யாகம் முதற்றிண் பணைபோக்கி யருந் தவத்தின்**
**சாகந் தழைத்தன் பரும்பித் தருமம் மலர்ந்து**
**போகங் கனியொன்று பழுத்தது போலு மன்றே'**

என்று மகாகவி கம்பர் அயோத்தி நகரைப் பாடியிருப்பதுபோல், அம்மனிதனின் வாழ்க்கைச் சிற்பம் எல்லா அம்சங்களிலும் பயனுள்ளதாகும்.

வாழ்க்கைச் சித்திரத்தின் நெசவு என்பது மானிட குணங்களின் உருவப்பாடும் ஒருமிப்புமே. குணங்களின் உருவப்பாடு என்பது செயல்களின் லாகவம் (Elegance) அல்லது புறத்தழகு வாய்ந்ததா யிருக்கலாம். அதற்கு மாருக, குணங்களின் உருவப்பாடு அகத்தின் அழகு (Beauty) அல்லது மூல அழகு என்பதை லக்ஷியமாகக் கொள்ளலாம். சிறந்த வாழ்க்கைக் கலைஞர் இம் மூல அழகையே தங்கள் வாழ்க்கையின் மேம்பாடாகக் கருதுவார்கள்.

**'நத்தம் போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்**
**வித்தகர்க் கல்லா லரிது'**

அதாவது, இவரிடம், 'அகத்தழகு செல்வமெய்தப் புறத்தழகு குன்றுதலையும், மனத்தின் சிறப்பு நிற்க லௌகிகச் சிறப்பு மாய்தலையும்' காணலாம். ருஷியா தேசத்து இதிகாச கவியாகிய டாஸ்டியோவஸ்கி என்பார், தம் நாவல்களில், புறத்தழகுக்கு மாருக அகத்தழகே உருவெடுத்துத் தெய்விக உயிர்பெற்ற கதாநாயகர்களை சிருஷ்டித்திருக்கிருர். அவர்களது வாழ்க்கைச் சித்திரத்தின் நெசவானது பிரத்யேக ஜீவியப் பொருண்மை அடங்கியதாயிருக்கிறது.

## iii. வர்ணம்

‘ இந்திய சங்கீதத்தின் உண்மைகளில் இது ஒன்று: சில இராகங்கள் சில வருணங்களைப் பிறப்பிக்கலாம்; அப்படியே சில வருணங்கள் அவற்றிற்கு உறவான இராகங்களை எழுப்பலாம்’ என்றார் ஒரு வட நாட்டுச் சங்கீத விதுஷி. இராகங்களுக்கு வடிவம், நறுமணம், நிறம் முதலியவை உண்டு. இராகங்களும், வருணங்களும் மனித இதயப் பொருளின் வெளிப்பாடுகளாக இருக்கின்றன. வருணம் என்பது வாழ்க்கையின் பரமார்த்தத்தினுடைய காட்சி — சோபிக்கும் காட்சி.

வாழ்க்கையின் பரமார்த்தம் என்பது, இயற்கை உலகிற்கும், மனித சிந்தனைக்கும் பொதுவான பந்தமாகிய ஓர் உயர்வு, பூரித்தல், கடலோசை போன்ற களியாட்டம், கற்பனை விலாசம் — என்ற நிலை. மனித வாழ்க்கையை விரித்தும், ஒருமித்தும், புதுப்பித்தும் அந்நிலையானது காண்பிக்கும். வாழ்க்கைக்கு வருணச் சிறப்பு உண்டாகும்; வாழ்க்கை நடத்தும் மானிடனுக்கு அதி மானிடமான ஓர் புஷ்டியும், அழகும், படிப்படியாய் வாய்க்கும். அவன் புலன்களின் புஷ்டி; அவன் சிந்தனையின் அழகு.

தெய்விகப் படைப்பின் அருள் அவன் கருமங் களில் புகுந்து விளையாடும்; உலக நாயகியின் மனத்தை வஞ்சிக்கும் இளமை மானிடனுக்கு உடன் பிறந்தது போல் அமையும்; அவனுடைய கரும விலங்குகளெல்லாம் அவனுக்கு அணிகலன் கள்; அவன் சோகங்களும், மனக் குறைகளும், அவன் வாழ்க்கையின் ஆழ்ந்த சங்கீதம்; அவன் வெற்றி தோல்விகளெல்லாம் அவனுடைய நெஞ் சின் ஈரத்திற்கும், எல்லாப் பொருள்களிடமும் அவன் வைக்கும் அனுராகத்திற்கும், வளர்ச்சி யளிக்கும் தண்ணீரும் உரமும்; அவன் எண்ணங் கள் எல்லாம் களங்கமற்ற சந்திரனின் வருணம்; அவன் ஆற்றல் அக்நி தேவனின் தூங்காத வினைத் திட்பம் போன்றது. இத்தகைய குணத்திரட் டின் ஓர் அம்சம்தான் வாழ்க்கையின் வருணம் என்பது. வாழ்க்கையின் வருண நிறைவு என்ப திலே, மனித குணங்களில் வளர்ச்சியும், அவற்றின் பயனுகிய செயல்களும், வாழ்க்கையில் காணும் லௌகிக தேவதையின் முழுத் தோற்றமும், அத் துடன் கூடிக் களிக்கும் பேரருளின் ஆவிர்ப்பாவ மும் குறிக்கப்படும்.

லௌகிக தேவதையின் வழிபாட்டை விவர மாய்க் குறிப்பிட வேண்டியதில்லை. தொழில், இன்பம், கல்வி கேள்விகள், திறனற்றவர்களுக் குக் கைகொடுத்துதவுதல், நாட்டின் கௌரவத்

திற்காக யமனையும் பழித்துச் சேவைபுரிதல், நேசித்தல், அரிய எண்ணங்களைப் பயன்படுத்தல், கதங்காத்துக் கற்றடங்கல், பொருள் ஈட்டுவித்தல், அவற்றை உலகிற்கு மறுபடி ஈதல், பயிர்செய்தல், இயற்கைத் தேவியைக் குருவாய் வரித்தல், காதலித்தல், காம நஞ்சை உண்டு சமித்தல், கபடும் கற்று மறத்தல், கண்ணுக் கின்பம் படைத்தல், பிறகு அவற்றை மறத்தல், உலக மயக்கில் களிப்புறுதல், அவ்வுலகத் தாயின் சோகத்தை உணர்தல், மானிட நாகரிகம் ஆத்மாவின் தலை நகரம் என்று ஆக்கிக்கொள்ளுதல், அதன் தீங்கிற்கு உட்படாதிருத்தல் — இவை யாவும் நம் புலன்களின் வன்மையாலும் நம் மனத்தின் இளமையாலும், நம் வாழ்க்கைச் சித்திரம் பெறும் வருணச் சிறப்பு.

பேரருட் தெய்வத்தின் ஆவிர்ப்பாவம் என்பது நம்முடைய மனித அறிவாற்றலை (சித்-சக்தியை) மலைபோல் வளர்த்தல், மலர்போல் விகசிக்கச் செய்தல், அழகுத் தெய்வத்தின் செயல் மலரினும் உரமுள்ளதன்று என்று ஷேக்ஸ்பியர் கூறுகிறார். சமஷ்டியறிவு என்று இத் தொடர் பிரசங்கத்தில் மூலக் கற்பனை என்ற பகுதியில் எடுத்துக் கூறப்பட்டது. அச்சமஷ்டியறிவை, கடவுளை வழிபடுதலாலும், கலைப் பயிற்சியில் உண்டாகும் பேராற்றலாலும், சுத்தமான மெய்

யடக்கத்தாலும், கொஞ்சம் கொஞ்சமாய் நாம் கைப்பற்றலாம். ஒரு சிலர் இச்சித்தியைப் பிறப்பி லேயே மூலதனமாகப் பெற்று, உலக ஆர்ப்பாட் டத்தின் (ஆர்ப்பாட்டம் மிகுந்த உலகின்) கூரிய பற்களால் வதைக்கப்பட்டாலும் தங்கள் பக்குவம் சிதருமல், தங்கள் நிகரற்ற பெருமையைக் காப் பாற்றிக் கொள்ளுகிருர்கள். இவற்றிலெல்லாம் வருணம் என்பதைக் கவனிக்கவேண்டும். மகத் தான தியானங்கள் அத்துவைத நிலைபெற்று சுத்த வெண்மை நிறம் பூண்டன: அறைகுறை யோகநிலைக்குரிய சிந்தனைகள் வெண்மை நிறத் தின் அம்சங்களான பல வருணங்களால் அமைக் கப்பட்டவை. வாழ்க்கைச் சித்திரம் சுத்த வெண்மை நிறம் பூண்டிருப்பது யோக நித்திரையி லிருக்கும் (யோக நித்திரை நிர்க்குண நிலை யல்லவே) நாராயண மூர்த்திக்குக்கூடப் பரிண மிக்கவில்லை என்றே எனக்குத் தோன்றுகிறது. அவர் பூர்ணசித்தியான இலக்குமியுடன், நாளு விதமான அரைகுறைச் சித்திகளையுடையவர் அல்லவா? அவர் வாழ்க்கைச் சித்திரம் வருணப் பெருக்குள்ள மானிட பாவத்தையே ஒத்ததாகும்.

புஷ்டியான இதயப் பொருளால் உண்டா கிற வருணப் பெருக்குச் சிலருக்கு இயற்கையா கவே உண்டு. மனிதன் கட்டிவைத்த பாபி லோன் போன்ற மாபெரு நகரங்கள் எல்லாம்

பாபிலோனின் திண்மையைப் பெற்ற மனித இத யத்தின் வன்மைகளையே விளக்குவதற்குச் சற்று முயலுகின்றன என்று ஆங்கிலக் கவி ஒருவர் உரைத்திருக்கிறார். உதாரணமாக, உலகத்தின் இதிகாச வீரர்களின் ஆக்கம் எப்படி விளைந்தது என்று பார்ப்போம். அஃது அவர்கள் தோள் வலிச் சிறப்பிலா இருக்கிறது? அவர்கள் மகி மையின் ஊர்ச்சிதமான பாகம் அவர்களின் இதய வன்மையிலும் அவர் வெற்றியை வியந்து பாடும் கவிஞர்களின் மகா மேரு போன்ற இதயப் பொருளிலும் அடங்கியிருக்கிறது. இக் கவி ஞர்களே — ஹோமர், வால்மீகி, வியாசர் — மாயா விகள்; புறத்தழகில் அப்பாவிகள்; ஆதிஉலகில் வாழ்க்கைச் சித்திரத்தை உண்டாக்கியவர்கள். அவ் வாழ்க்கை மாண்பிற்கு மூல காரணம் சகல வருணங்களையும் கக்கும் ஒளிக்கல்லாகிய அவர் களின் மனமல்லவோ?

அவ்விதமே பாராளும் படர் செல்வமும் தமக்கே ஆக்கிக் கொண்டு அசுரபோகம் தேடும் மானிடர்கள் ஒவ்வொரு தலைமுறையிலும் தோன்றுகிறார்கள். இவர்கள், வருண மழை யைப் பெய்து, சித்திரம் வரையும் தன்மையுள்ள ஓவியக் கலைஞர்களுக்கு ஒப்பாவார்கள். இவர் களின் பிரதாபச் செயல்கள் உலகின் அழகை எல் லாம் பன்மடங்கு மிகுத்தும் விரித்தும் காட்டு

கின்றன. வெகு பிரபலமாய், வெகு நாகரிகமாய் என்று சொல்ல முடியாது; தெய்வ வரம் தாங்கிய வரையில் இவர்கள் சிறப்பாக வாழ்வார்கள். இவர்கள் இதயம் கடல் நீரைப்போல் அலை அலையாய்க் கிளம்பி உலக வாழ்க்கையை மோதும்; இறுதியில் பிளவுபட்டுச் சிதைந்து மாய்ந்து விடும். நெப்போலியனும், 14வது லூயி என்ற பிரஞ்சு தேசத்து அரசனும், மொகலாயரில் ஜிகாங்கிரும், பெண்ணரசிகளில் ஸ்காட்லாண்ட் அரசியான மேரியும், ஸ்வீடன் தேசத்துக் கிரிஷ்டினுவும், முனிகளில் விசுவாமித்திரரும், பூர்வ ஹிந்து அரசரில் ஜராசந்தனும், பின்வந்த அரசரில் கரிகால சோழனும், மார்க்கதர்சிகளில் மகம்மதிய மதத்தைச் சேர்ந்த அநேகரும், கலைஞர்களில் மைக்கல் ஆஞ்சலோவும், நடிகர்களில் ஸாரா பேர்ன்ஹார்ட்டும், ராஜதந்திரிகளில் பிஸ்மார்க்கும், தேசாபிமானிகளில் மாட்ஸினியும், உலகாபிமானிகளில் பொது உடைமை வீரர்களும், கட்டழகிகளில் திரௌபதியும், கற்பின் வெப்பம் ஏறியவர்களில் கண்ணகியும், இதிகாசப் படைப்பாளர்களில் வியாசரும், விரதம் பூண்டவரில் பீஷ்மரும், வரம் பெற்றவரில் இராவணனும், கர்த்தர்களில் கிருஷ்ண பகவானும், அமிதமான வருணச் சிறப்பைத் தங்கள் வாழ்க்கையில் புகுத்தியவராவர்.

3474

இதுவன்றி, அளவின்கண் நின்ற வாழ்க்கைக் கலை ஒன்றிருக்கிறது. அதின் வருணச் சிறப்பு எவ்வாறு என்றால், 'காலத்தில் மழைக் கடவுள் மழையைக் கொடுக்கிறான், பூமி பயிர்களைப் பூண்டு செழிக்கிறாள். ஸ்ரீரங்கநாதர் வெற்றி பெறுகிறார்' என்ற எளிய வடமொழி வாழ்த்துக்கிசைந்த உலகச் சித்திரம் போன்றது. நல்ல, சுகமான கணிதம் அல்லது ரசாயன ஆராய்ச்சி; நாரத கானம்; புத்தர்பிரான் அருள்; சீதையின் அழகு; குகனின் நற்குணம்; சபரியின் பக்தி; அகலிகை சாபந்தெளிந் தெழுதல்; குந்தியின் பொறுமை; பல்லவரின் கோயிற் சிற்பம்; அசோக சக்கரவர்த்தியின் ஆணைகள்; அஜாந்தா சித்திரக் கலை; இளங்கோவின் கவிதை; ஆண்டாளின் தெய்விகக் காதல்; அயோத்தி நகரின் வல்லரசு மகிமை; ஆரம்ப கங்கை; தெள்ளிய தாம்பிரபர்ணித் தண்ணீர் (நல்லார் மனத்தைப் போல் தெள்ளியதாம்); பரதனின் உடன் பிறந்தோன் அன்பு; விஷ்ணுவின் சங்கு; காளிதாசனின் கல்வியழகு...இத்தகைய செம்மையான வடிவும் இதயப் பொருளும் உள்ளது அவ் வாழ்க்கை வருணம். குமாஸ்தா முதல் இளவரசு வரையில் எப்பதவியானாலும் அதில் ஒருவன் இக்குணங்களைத் தன் வாழ்க்கையில் விளக்கக் கூடும். வருணமும், அவ்வருணத்திற்குரிய இரா

கமும் நட்சத்திரத்திலிருந்தும், பச்சை இலை, பசும்புல், பல மணிகளின் ஒளிப்பெருக்கு, முதலி யவற்றிலிருந்தும் எடுத்துச் சேர்த்த இதயப் பொருள்கள். இவை அம்மனிதன் வாழ்க்கையை மங்களமாக்குகிறது. அம் மனிதன் திருவின் தோழன். அவனது மானிடத்தன்மை கல்லிற் கசிந்து உருகிக் கடவுளையும் இன்புறச் செய் கிறது.

## iv. சிற்ப - ஒருமிப்பு

வாழ்க்கைச் சிற்பத்திற்குத் தேவையான மூலக் கற்பனை, நெசவு, வருணம் என்ற அமைப்புப் பொருள்களைப் பற்றி இதற்கு முந்திய பேச்சுக்களில் ஒரு சிறிது கூறப்பட்டது. இனிச் சிற்ப - ஒருமிப்பு என்றதைக் கொஞ்சம் எடுத்துச் சொல்லிவிட்டு இப்பேச்சுத் தொடரை முடிக்க விரும்புகிறேன்.

ஒருவனுடைய வாழ்க்கைக் கலை தகுந்த உயர்வு பெற்று விளங்குவது எப்பொழுது என்றால்,அவன் வாழ்க்கையானது ஒரு சிற்பப் படைப்பின் இயல்புகளைப் பெற்றிருக்கும்பொழுதுதான். ஒரு உறுப்பான நோக்கம்,தகுந்த சிற்பச் சாமான், நன்கு பொருந்திய உபகரணங்கள், இவை எல்லாவற்றிற்கும் பெரிதான ஓர் உறுப்பான கற்பனைப் பொருள் என்ற நான்கு அம்சங்களை ஒவ்வொரு நயமான சிற்பப் படைப்பும் பெற்றிருக்கிறது. அப்படியே ஒருவனுடைய வாழ்க்கையும் உறுப்பான நான்கு அம்சங்கள் அடங்கியதாகவேண்டும். சிற்பத்திற்கு, உறுப்பான நோக்கம் அல்லது உபயோகம் வேண்டும்; வாழ்

கைக்குப் பெரும் பயன்களாக, புத்தியினுல் விளை யும் உபசாந்தமும், நெஞ்சக் கிளர்ச்சிகளில் லயஸ்திதியும் வேண்டும். சிற்பத்திற்கு, தகுந்த சாமான் அல்லது உண்டாக்கும் பொருள் வேண் டும்; வாழ்க்கைக்கும், தொழில்கள், செல்வங் கள், விளையாட்டுக்கள், ஆக்கிரகங்கள் என்ற சிற்பச் சாமான் வேண்டும். சிற்பத்திற்கு, தகுந்த கலைக் கருவிகள் வேண்டும்; வாழ்க்கைக் கலைக் கும், புத்திப் பயிற்சி, இதயப் பொருள், ஆண் மைக் குணம், கண்ணேட்டம், பிரபஞ்சத்தைப் பற்றிய கற்பனை கலந்த உள்ளறிவு, என்ற மனக் கருவிகள் வேண்டும். சிற்பத்திற்கு, மூலக் கற் பனை வேண்டும்; அப்படியே வாழ்க்கைக்கும், மூலக் கற்பனை வேண்டும். வாழ்க்கை நடத்து வோனும் ஒரு கலைஞனைப் போல் கற்பனை நிறை குடம் என்ற இயற்கை நிலை யுள்ளவனுகிருன். பிறகு ஒரு சிறிது அப்போதைக்கப்போதே தன் வாழ்க்கையின் ஒழுங்கையும், வருணச் சிறப்பை யும், அவற்றின் பயனுகிய சிற்ப - ஒருமிப்பு அல் லது அழகு என்றதையும் தானே படைத்து இன்புறுகிருன்.

சிற்பம், சித்திரக் கலை - ரசம், ஒவ்வொரு நிமிஷமும் வாழ்க்கையில் உண்டாகிறது. ‘ஓர் அழகிய இரவில் நான் கண்ட காட்சி’ என்பதை என் தினசரியில் ஒரு நாட் குறிப்பிலிருந்து எடுத்

துக் கூறுகிறேன்: ‘நல்ல நிலா வெளிச்சம் அடிக்கிறது. நிலங்களெல்லாம் ஓர் அமைதியை நுகர்ந்து சுவையுற்றிருக்கின்றன. வீட்டிற் குள்ளே இருப்பது இயல்புக்கு விரோதமாயும் வாழ்க்கையைப் பழிப்பதாயும் தோன்றுகிறது. ...........ஏழைகள் சிரித்தல், பரம ஏழைகள் சிரித்தல், தூரத்தில் கேட்டது. கேட்டது நிலா வெளிச்சத்தில். பாறையில் மோதிய அலையின் வெள்ள நுரைபோல், அச்சிரிப்பும் வெண்ணி லாவும் கலந்தது தோன்றிற்று. அதற்கு முன் ஒரு சிறிய பாட்டுக் குரல், மரத்தில் ஜீவரசம் ஏறுவது போல், காற்றில் சாந்தமாய் ஏறியது. அந்நிலாவின் உள்ளன்பு போலிருந்தது.’......

இந்தச் சாதாரண தினசரிக் குறிப்பு விளக்குவது என்னவென்றால், வாழ்க்கைக்கும் சிற்பக் கலைக் கும் பொதுவரையா யுள்ள அழகுத் தேசம் ஒன் றிருக்கிறது; அதிற் புகுந்து அவ்வழகைத் தேடிய வண்ணமாய் நாமிருக்கவேண்டும் என்பது. கலைப் பயிற்சியில் சித்தி அடைகிறவர்களுக்கு, விசேஷ மாய் இந்த சாந்தமான, நிஷ்காமியமான, அதே தொழிலாகவுள்ள, சிற்பப் பார்வை — எல்லாப் பொருள்களின் வடிவு, உருவம், அர்த்த புஷ்டி என்பவற்றைச் சாக்ஷாத்காரம் செய்தல்,—சகஜ மாயிருத்தல் வேண்டும். வாழ்க்கைச் சித்தியும், கலைச் சித்தியும், ஒரேவிதமான பொருளுடைமை

வாய்ந்த உருவங்களைப் படைத்தலிலேயே நிறை வேறுகின்றன. உருவப்பாடு, உருவப்பாடுகளின் நெசவு, வாழ்க்கைச் சித்திரத்தில் எவ்வாறு உண் டாகிறது என்பது இப்பிரசங்கத் தொடரின் இரண்டாவது பாகத்தில் கூறப்பட்டது. பிறகு சிற்பக் கலைஞனின் ஆத்ம சக்தியும், வாழ்க்கைக் கலைஞனின் இதயப் பொருளும்,—அதாவது முக்கியமாக அவன் ஆண்மையும், கண்ணோட்ட முமே — வருணம் என்று கூறப்பட்டது. படத் தின் வருணங்கள், மனிதனின் இதயத்தின் விகா சங்கள்: இவை இரண்டும் ஒன்றே. அப்படியே சிற்பத்திலும் வாழ்க்கையிலும் ஈஃவர பாவம் பெற்றது கற்பனை சக்தியே. இனி, சிற்பத்தின் ஒருமிப்பு வாழ்க்கையில் எவ்வாறு நமக்குக் கிட்டுகிறது என்று பார்ப்போம்.

ஒரு சிற்பத்தில் முக்கியமான அம்சம், சிற்பி யின் உத்தேசம் அவன் இதயப் போக்குடன் உடன்படிந்து வேலை செய்கிறதா என்பதில் அமைந்திருக்கிறது. 'இந்தக் கருத்தை உருவப் பாட்டுடன் சித்திரத்தில் அமைப்பேன்: அதில் என் வாஞ்சைகள் எவ்விதம் புகுந்து பூரிக்கின் றன...' என்று சிற்பியானவன் கவனித்தவண்ண மாயிருக்கிறான். கோகின் என்ற பிரஞ்சு ஓவியக் கலைஞனைப் போல் திரை கடலோடியும் சிற்ப தத் துவத்தைத் தேடி, தன் ஜீவிதத்தில் புகுத்தி விடு

கிருன். அதன்பின் அத்தத்துவத்தைப் பொருள் களில் அமைக்கிருன். ஆகையால் விடா முயற் சியும் எண்ணியவைகளைச் செய்யத் துணிதலும் சிறந்த கலைவாணனுக்குப் பிறவிக் குணங்களாக அமைகின்றன. கலைஞனின் கொள்கை, அல்லது உத்தேசம், அவன் சிற்பப் பிரம்மத்தில் மானஸ ஸஞ்சாரம் செய்தல்: என்ற இவ்விரண்டும் உலகப் புகழ் பெற்ற சிற்பங்களில் ஒற்றுமைப்பட்டிருப் பதைப் பார்க்கலாம். வாழ்க்கைச் சித்திரத்தி லும் அப்படியே ஒருவன் புத்தியின் உத்தேசமும் பலவிதமான இச்சைகளைப் படைக்கும் அவனு டைய மனமும் உடன்பாட்டுடன் செயல்களை நிறைவேற்றல் வேண்டும்.

அவ்வாறு உண்டாகும் வாழ்க்கை நிர்மாணத் திற்கு வெளியிலிருந்துவரும் மதக்கொள்கையோ சமூகப்பாங்கோ, ஒருவித மாறுதலையும் உண் டாக்க முடியாது. வாழ்க்கையின் விதிகளும், வழக்கங்களும், அதன் அழகான பகுதிகளும், உள்ளத்தழகின் கலைகளும், இரேகைகளும், தமக் குள் தாமே ஒழுங்குபடுகின்றன ; பூர்த்தி அடை கின்றன. வாழ்க்கைக் கலைஞனின் சிந்தனையே அவற்றின்மேல் அதிகாரம் வகிக்கிறது. மூலக் கற்பனையில் ஒழுங்கு ; உருவப்பாட்டில் ஒழுங்கு; வருணத்தில் ஒழுங்கு ; ஸ்வத: ஸித்தமான ஒழுங்கு ; யாவற்றினும் ஒழுங்கு. சிற்ப சக்தியா

னது அரசு நடத்துவது இவ்வாறே. அது பொருள்களின் நுண்ணிய பேதப் பிரிவுகளையும், அவற்றுள் உண்டாகும் அரிய அவஸ்தைகளையும் சிற்பவேலைகளில் ஆக்கமும் உருவும் பூண்டவைகளாகச் செய்கிறது. சிற்பத்தின் ஒருமிப்பு என்ற புண்ணியப் பிறவியானது சிற்ப அறிவாளியின் மனத்தில் உதித்து வளர்ந்து மங்களமும், சாஸ்வதமும் பெற்ற ஓர் கன்னித் தெய்வமாகும். சிற்பியைப் போல், வாழ்க்கை நடத்துபவனும் 'நானே பிரமன்' என்று சொல்லிக்கொள்ளக்கூடும்.

ஆனால் வாழ்க்கைக்குப் பயனளிக்கும் சாமான்ய ரசிகத்தன்மை யாது? யோகப் பயிற்சியுள்ளவன் எல்லாச் செயல்களிலும் பிரியத்துடன் ஈடுபடுகிறான் என்று கீதையில் சொல்லி யிருக்கிறது. அப்படியே ரசிகனும் மானிடர்க்குரிய எல்லாவற்றையும் பேணிப் பாராட்டுகிறான். உடை, இருக்கை, ஆசனங்கள், வாசனைப் பொருள்கள், தின்பண்டங்கள், எழுதும் கருவிகள், போர்க் கருவிகள், தானியங்கள், இரத்தினங்கள், இள வெயில், மழை, எருதுகள், யானைகள், மயில்கள், கன்னி மாடங்கள், பள்ளர்பெண்கள் வேலை செய்யும் களங்கள், தலை நகரங்கள், சேரிகள், 'ஆற்றுப் பெருக்கு', 'அடிசுடும் நாளின் ஊற்றுப் பெருக்கு', 'உலகூட்டல்', உலோபியாயிருத்தல், சங்கீதம், சந்தையிரைச்சல், ஒவ்வொன்

றிலும் உள்ள தனிச் சுவையை அறிந்தவன் ரசிகன். ஆனால் அழகு அழகின்மையைவிடச் சிறந்தது என்று மட்டும் தீர்மானித்துச் செயல்களின் இசையைக் கவனிக்கிறான். தன் செயல்களையும், உலகத்தின் செயல்களையும் ஒருங்கே புறத்தழகு என்ற தராசில் நிறுக்கிறான்.

அகத்தழகுக்குத் தராசு, படிக்கல் ஒன்றும் கிடையாது. 'வெள்ளத்தனைய மலர் நீட்டம்.'

இங்கே, புறத்தழகு அல்லது சாமானிய ரசிகத் தன்மை என்பதைச் சிற்ப ரசம் அறிவதற்கு மூலமாகக் காண்கிறோம். சிற்பச்சுவை பேணுதல் என்பது யாவருக்கும் கால நடையில் கிட்டுவது என்றே நினைக்கிறோம். 'வாழ்தலில் அழகை நன்றாய் உடுத்தல், உண்ணல் என்பவை கொடுக்கும். சாதலில் அழகை ஆத்மகுணமே தரவேண்டும்' என்று ஒருவர் சொல்லியிருக்கிறார். அது எப்படி யிருந்தாலும், வாழ்க்கையில் ரசிக பாவம், அதாவது சில்லறை விஷயங்களில் நாம் பகுத்தறிவுடனும், சுயேச்சை யுடனும் வேண்டுபவற்றைத் தேடிக் கொள்ளல், என்பது மனித நாகரிகத்திற்குப் பயனுள்ள தாகும். அதுதான் நாகரிக பாவம் என்பது. ரசிகத் தன்மை குன்றி அழிந்து போனால், மனித வர்க்கம் பாழ்படும். இப்பொழுது ஐரோப்பிய சாதியார்கள் அந்நிலை

யில் அகப்பட்டிருப்பதாகச் சொல்லுகிறார்கள். ஒருவர் கூறுகிறார் :— வாழ்க்கையில் அநேக விஷயங்கள் தம்மியல்புடன் தோன்றுவது, இயற்கையுடன் சேருவது எப்பொழுது என்றால், அழகின் வாயிலால் அவற்றை நாம் பார்க்கும் பொழுதே. நாம் மற்றவருடன் பழகும் மாதிரி அழகின்றி யிருந்தால், அது அர்த்த மில்லாமல் போய் விடுகிறது. அப்படியே சம்பாஷணையும்; அப்படியே கீதமும்; அப்படியே தேவாராதனையும்; மனிதன் கையாண்டு வரும், ஒவ்வொரு செயலும், அவன் பாவ புஷ்டியை விளக்கும் ஒவ்வொரு முயற்சியும் அப்படியே. மேலும் சிறந்த சிற்பப் படைப்பின் அழகும் முதல் முதலில் சாமானிய அழகாய்த் தோன்றியே பரிணமிக்கிறது. இடையூறுகளை அடக்கி ஆளும் அழகுத் தன்மை நம் முயற்சிக்கு முதலில் வேண்டும். நடுத்தரமான சிருஷ்டிகளில் நாம் பார்ப்பது, சிற்பக் கலைக்கு நேரிடும் இயற்கையான பங்கங்களும், தடைகளுமே. மத்திமச் சிற்பவேலைகளிலிருந்து அவற்றை நாம் ஊகிக்கிறோம். மிக்க உயரிய சங்கீதத்தில்தான் விக்கினங்களையும் பழுதுகளையும் அழகுத் தெய்வம் முற்றிலும் முறியடித்துத் தன் லக்ஷியத்தை அடைகிறாள். தானே தனிக் கோயில் ஒன்று கட்டிக்கொண்டு அவ்விடம் புகுந்துவிடுகிறாள்.

அலங்கோல நடப்பு, வாழ்க்கைக்கு ஒரு விதத்தில் இயற்கையாவது என்று சொல்லலாம். தற்கால மேற்கத்திய நாகரிகத்தை 'ஜாஸ்' நாகரிகம் என்று சொல்கிறுர்க ளல்லவா? கௌரவத்தையும், அழகையும், புத்தி நுட்பத்தையும் மிகவும் பழித்து, வக்கிர கதியாய்க் குதித்துக் கோஷித்துக் கொந்தளித்து, கிராம்யமான இன்பங்களையும் கூத்துக்களையும் சிறப்பாக எண்ணி, உலகம் மட்டித்தனமாய் நடக்கிறபடி வாழ்க்கையும் நடக்குமென்று கொண்டு, மனம் என்ற அமைதியற்ற காட்டில் தோன்றும் காட்சியை எல்லாம் பிரதிபலிக்கச் செய்து, கலைச்சுவை என்பது பொய் என்று சித்தாந்தம் செய்து, வாழ்வைக் கழிக்கும் ஜனங்கள் நாகரிகம் முற்றிப் போன தேசங்களில் அபரிமிதமாகத் தோன்றியிருக்கிறுர்கள். இவர்களுக்கு எதிர்ப்பு, எங்கிருந்து வருகிறது? சிற்ப லாகவம், பொருள்களின் ஸ்வரூப ஞானம், ரூபம் உண்டுபண்ணும் சக்தி, அழகு நித்தியமானது என்று கண்டு தேறுதல், வெளியுலகில் லயஸ்திதி உண்டாக்கலாம் என்ற நம்பிக்கை, முயற்சி திருவினை யாக்கும் என்று தெய்விக ஊக்கத்தைப் பேணுதல்; ஆழ்ந்த கருணை ரசம்; ஜ்வலிக்கும் தியான சக்தி; எல்லாவற்றிலும் மேலான வண்மை பூண்டு தெளிவடைந்த மானிட புத்தியின் மூடுபடாத

ஒளி, அதின் விளக்கம்: இவற்றி லிருந்தே தாமஸ வாழ்வை அழிக்கும் வீரத் திருவுயிர் அவதரிக்கும்.

3474

# அநுபந்தம்

இந்நூலில் உபயோகிக்கப்பட்டிருக்கும் அத்தியாயப் பெயர்களும் அவைகளுக்கு ஏற்ற ஆங்கிலப் பெயர்களும் வருமாறு :

| | | |
|---|---|---|
| i. | மூலக் கற்பனை | Motif |
| ii. | நெசவு<br>[சித்திர வாய்ப்பு] | Pattern |
| iii. | வர்ணம் | Colour |
| iv. | சிற்ப - ஒருமிப்பு | Composition |

3474

The Jupiter Press, Madras.

3474


## உங்களிடம்
## நவயுகப் புத்தகங்கள் எல்லாம்
## இருக்கின்றனவா ?

'நவயுகப் பிரசுராலயப் புத்தகங்களைத் தமிழ்நாட்டுத் தலைவர் ஸ்ரீ ராஜகோபாலாசாரியார் பார்த்ததும், "புத்தகங்கள் எல்லாம் ரொம்ப ஜோராயிருக்கின்றன!" என்று சொன்னார்.

'மாஜி மந்திரி ஸ்ரீ கோபால ரெட்டி, நவயுகப் பிரசுரங்களைப் பார்க்கும்போதெல்லாம், "ஆந்திர நாட்டில் இம் மாதிரி பிரசுரிப்பாரில்லையே!" என்று சொல்லுவார்.'

— தினமணி

## தமிழில்
## விஞ்ஞான நூல்கள்
## வந்துவிட்டன !

| | | | |
|---|---|---|---|
| **வானொலியும் ஒலிபரப்பும்** | **2** | **0** | **0** |
| தபால் செலவு | **0** | **5** | **0** |
| **மின்சாரத்தின் விந்தை** | **1** | **12** | **0** |
| தபால் செலவு | **0** | **5** | **0** |
| **அற்புத உலகம்** | **1** | **0** | **0** |
| தபால் செலவு | **0** | **3** | **0** |
| **ஆரம்ப அரசியல் நூல்** | **1** | **8** | **0** |
| தபால் செலவு | **0** | **4** | **0** |

உங்கள் விலாசத்தையும் எங்கள் விலாசத்தையும் தெளிவாய் விவரமாக எழுதவும். இல்லாவிடில் கடிதங்கள் தவறிவிடலாம்.

---

**நவயுகப் பிரசுராலயம் லிமிடெட்**

2/28, மூக்கர்நல்லமுத்து தெரு, ஜி.டி., சென்னை